# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,182 — 1960 අගෝස්තු 12 වැනි සිකුරාද — 12.8.1960

12,182 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 201 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள பகுதி VI—விவாக, பிறப்பு, இறப்புப் பதிவுகாரர்கள் நாமாவலியைக் கொண்டுள்ளது.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா

மேற்குப்பகுதி நீர்ப்பாசன எஞ்சினியர், கொட்டா தெரு, கொழும்பு 8 ல் இருக்கும் தமது காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6 ந் திகதி மு. ப. 11.30 மணிவரை சப்பிரகமுவா மாகாணத்தைச்சேர்ந்த இரத்தினபுரிப் பகுதியிலுள்ள ஹிதல்லனையில் ஓவசியர் மாதிரி வசிப்பிடம் கட்டுவதற்கு கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்வார்.

இரத்தினபுரி சிறு பகுதியிலுள்ள நீர்ப்பாசன எஞ்சினியரிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களில் சீலிடப்பட்ட கடிதமூலம் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்கள் மேற்கூறிய காரியாலயத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

நீர்ப்பாசன இலாகாவில் 20,000 ரூபாய்க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டது என அத்தாட்சிப்படுத்தும் கொந்தராத்துக்காரர்களுக்கு 25 ரூபா கட்டி ரசீது பெற்று சமர்ப்பிப்பவர்கட்கு 12.8.60 தொடக்கம் 3.9.60 வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அரசாங்கத்தில் தற்பொழுது கொந்தராத்துவேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகத்தரிடமிருந்து வேலை நன்முறையில் நடைபெறுகிறதற்கு அத்தாட்சியாக நற்சாட்சிப்பத்திரம் பெற்று கேள்விப்பத்திரங்கட்கு மனுச்செய்யும் போது சமர்ப்பிக்கவேண்டும்.

அரசாங்கம் யாதொரு கேள்வியுமின்றி முழு ரெண்டரையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுப்பதற்கோ அல்லது ஒரு பகுதியைமட்டும் ஏற்றுக்கொள்ளவோ சகல உரிமையும் உடையதென இத்தால் உறுதிப் படுத்தப்படுகிறது.

க. கனகசுந்தரம்,
நீர்ப்பாசன எஞ்சினியர்,
இரத்தினபுரி சிறு பகுதி.

யாவத்த ரோட் கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப்பத்திரங்களில் இணைப் பிரதிகள் மூலம் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். இவரிடம் இவ் வேலைக்குரிய மாதிரிப்படங்களைப் பார்வையிடவும் மற்றும் விபரங்களை அறிந்துகொள்ளவும் முடியும்.

கேள்விப்பத்திரங்களைக் கட்டிட உபபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் 2.9.60 வெள்ளிக்கிழமைவரை அலுவலக வேலை நேரங்களில், நீர்ப்பாசன இலாகாவில் மேலே கூறப்பட்டுள்ள தொகைகளுக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களென அத்தாட்சியுடைய ஒப்பந்தக்காரர்கள் கச்சேரியில் அல்லது யாவத்த ரோட் கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உபபகுதிக் காரியாலயத்தில் ஒவ்வொன்றிற்கும் ரூபா 25 முற்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்கத்துக்கு எவ்வித கேள்வியுமின்றி கேள்விப்பத்திரத்தை முற்றுக அல்லது பகுதியை மட்டும் நிராகரிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் உரிமையுண்டு.

விண்ணப்பதாரிகள் தற்பொழுது ஏதாவது வேலை ஒப்பந்தமுடையவர்களாயிருப்பின் அவர்கள் தாங்கள் செய்யும் வேலை திருப்திகரமாக நடைபெறுகிறதென்று சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப்பத்திரம் பெற்றுத் தங்கள் விண்ணப்பப்பத்திரங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

வி. குமாரசுவாமி,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கட்டிட உப பகுதி.

நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம்,
யாவத்த ரோட், கொழும்பு 5,
3.8.60.

---

### நீர்ப்பாசன இலாகா

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள மேற் பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், கீழ்க்காணும் வேலைகளைச் செய்வதற்கு, அவ்வற்றிற்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகைக்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 6.9.60 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணிவரை மெழுகு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

(1) கட்டுபெத்த பண்டசாலைக்குப் போகும் வழிக்குக் கல்போடுவதற்கும் தார் ஊற்றுவதற்கும்—ரூபா 8,500 ;

(2) இரத்மலானையிலுள்ள நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த தொழிற்சாலையிலுள்ள பண்டசாலையைச் சுற்றி 20 அடி அகலமுான தார்வீதி அமைப்பதற்கு—ரூபா 19,500.

---

### நீர்ப்பாசன இலாகா

கொட்டா ரோட், கொழும்பு 8 ல் உள்ள மேல்பகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், கீழ்க்காணும் வேலைகளைச் செய்வதற்கு அவற்றிற்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகைக்கும் அதற்கு மேலும், நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, 6.9.60 செவ்வாய்க்கிழமை மு. ப. 11.30 மணிவரை மெழுகுமுத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

| | ரூபா |
|---|---|
| (1) கொழும்பு, யாவத்த நீர்ப்பாசன காரியாலயத்துக்கு மேலும் பாதைகள் அமைப்பதற்கு .. | 17,500 |
| (2) யாவத்த நீர்ப்பாசன காரியாலயத்தில் மேலும் வாகன சாலைகள் அமைப்பதற்கு .. .. | 6,800 |

யாவத்த ரேட், கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உபபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப்பத்திரங்களில் இணைப் பிரதிகள் மூலம் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். இவ்வேலைக்குரிய மாதிரிப்படங்களைப் பார்வையிடவும், மற்றும் விபரங்களை அறிந்து கொள்ளவும்முடியும்.

கேள்விப்பத்திரங்களைக் கட்டிட உபபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் 2.9.60 வெள்ளிக்கிழமை வரை அலுவலக வேலை நேரங்களில் நீர்ப்பாசன இலாகாவில் மேலே கூறப்பட்டுள்ள தொகைகளுக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களென அத்தாட்சியுடைய ஒப்பந்தக்காரர்கள் கச்சேரியில் அல்லது யாவத்த ரேட் கொழும்பு 5 ல் உள்ள கட்டிட உப பகுதிக்காரியாலயத்தில் ஒவ்வொன்றிற்கும் ரூபா 25 முற்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்கத்துக்கு எவ்வித கேள்வியுமின்றி கேள்விப்பத்திரத்தை முற்றாக அல்லது பகுதியை மட்டும் நிராகரிக்கவும் ஏற்றுக் கொள்ளவும் உரிமையுண்டு.

விண்ணப்பதாரிகள் தற்பொழுது ஏதாவது வேலை ஒப்பந்தமுடையவர்களாயிருப்பின், அவர்கள் தாங்கள் செய்யும் வேலை திருப்திகரமாக நடைபெறுகிறதென்று சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப்பத்திரம் பெற்றுத் தங்கள் விண்ணப்பப்பத்திரங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

வி. குமாரசுவாமி,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கட்டிட உபபகுதி.

நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம்,
யாவத்த ரேட், கொழும்பு 5,
1960 ம் ஞு ஒகஸ்ட் மீ 5 ந வ.

---

## நீர்ப்பாசன இலாகா

குருநாகலிலுள்ள வடமேற்குப் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் 7.9.60, புதன்கிழமை காலை 9.30 மணிவரையும் ரூபா 10,000 த்திற்கும் அதற்கு மேற்படவும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மாகோ புகையிரத ஸ்தானத்திற்கும் அவ்விடமிருந்து நிக்கவறட்டியப் பகுதியில் இருக்கும் வேலைத்தலங்களுக்கும் 1.10.1960 தொடக்கம் 30.9.61 வரைக்கும் பொருட்கள் கொண்டு போகவும் வரவும் கேள்விப்பத்திரங்கள் ஏற்பார்.

கேள்விப்பத்திரங்கள் 5.9.60 திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணி வரைக்கும் நிக்கவறட்டியாவிலுள்ள நீர்ப்பாசன இஞ்சினியருடைய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். வேலையை ஒத்த ஏனைய விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ரூபா 25 ஒரு கச்சேரியிலோ அல்லது மேற்கூறிய காரியாலயத்திலோ பிணைப்பணமாகக் கட்டிப் பற்றுச்சீட்டு கொண்டு வருபவர்களுக்கு மட்டும் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

எல். பி. எம். பர்னுண்டோ,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
நிக்கவரட்டியப் பகுதி.

நீர்ப்பாசன காரியாலயம்,
நிக்கவறட்டியா,
2.8.1960.

---

## கடற்றொழிற் பகுதி

### வெண்கலச் சீவல் விற்பனைக்காய கேள்விகள்

முகத்துவாரக் கடற்றொழில் உற்பத்திச்சாலை பண்டசாலையில், கிட்டத்தட்ட 425 இரு. வெண்கலச் சீவல் விற்பனைக்காய கேள்விகள் காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களால் 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ந திகதி மு.ப. 10.30 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள், கீழ் கைச்சாத்திடுபவரிடமிருந்து எடுத்த பத்திரங்களில் இருக்க வேண்டும்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 50.

டி. ர். ஈ. ஏ. டீ. பொனம்சகா,
கடற்றொழில் அதிபர்.

காலிமுகம்,
கொழும்பு 3.

### மகாருக் கல்லுடைப்பிலுள்ள தென்னைமரங்களின் பயனைப் பெறக் குத்தகை

15.10.60 ல் இருந்து ஒரு வருடத்திற்கு மகாருக் கல்லுடைப்பு இடத்திலிருக்கும் தென்னை மரங்களின் பயனைப் பெறுவதற்கான குத்தகைக்கு 1960 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ந திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் துறைமுக ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு, துறைமுக ஆணையாளர் களரியில் 25 ரூபா கட்டி, அக்களரியிலிருந்து பெற்றுக்கொள்ளும் விசேட கேள்விப்பத்திரம், இணைப்பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ந திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிவரையில் களரி வேலை நேரங்களில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

இக்கேள்விக்கான முழு விபரங்களும் கேள்விப்பத்திரங்களுடன் கிடைக்கும்.

ஏ. எஸ். கோபன்விக்ரம,
துறைமுக ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை,
கொழும்பு, 1960 ம் ஞு ஜுலை மீ 30 ந வ.

---

## உணவு அதிகாரியின் பகுதி

### வியாங்கொடை உணவுக் கட்டுப்பாட்டு பண்டசாலையில் மலசல கூடச் சேவைகள் புரிவதற்கான கோரிக்கைகள்—1960/1961

1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ந திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந திகதி (உட்பட) வரை வியாங்கொடை உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டசாலையில் மலசல கூடச் சேவை புரிவதற்கான கோரிக்கைகள் உணவு அதிகாரியால் 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 6 ந திகதி பிற்பகல் 2.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. உணவு அதிகாரியின் காரியாலயம், 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்னும் விலாசத்திலிருந்து 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 ந திகதி நண்பகல் 12 மணி வரையும் பெற்றுக்கொள்ளப்படும் பத்திரங்களில் கோரிக்கைகள் (இரு பிரதிகளில்) செய்யப்பட வேண்டும். குறிப்பிட்ட பத்திரத்தில் செய்யப்படாத கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கோரிக்கைப் பத்திரம் வழங்குமுன், உணவு அதிகாரியிடம் ரூபா 50 தங்குபணமாகக் கொடுத்ததற்குப் பற்றுச் சீட்டுக் காண்பிக்கப்படவேண்டும்.

3. இக் கோரிக்கை சம்பந்தப்பட்ட முழு விபரங்கள் அடங்கிய ஓர் பத்திரத்தை உணவு அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. சுப்பிரமணியம்,
உணவு அதிகாரிக்காக.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ந திகதி.

---

## உணவு அதிகாரியின் காரியாலயம்

### 1.10.60 தொடக்கம் 30.9.61 மட்டும் காலி சுங்கத்துறையில் வேலைக்குத் தொழிலாளர் வழங்குதற்கும் உணவுப் பொருட்கள் கையாளுதற்குமான கோரிக்கைகள்

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந திகதி மட்டும் காலி சுங்கத்துறையில் வேலைக்குத் தொழிலாளர் வழங்குதற்கும் உணவுப் பொருட்கள் கையாளுதற்குமான கோரிக்கைகள் வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ந திகதி பிற் பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ந திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் கோரிக்கைகள் (இரு பிரதிகளில்) செய்யப்பட வேண்டும். இக்கோரிக்கைகளுக்கான பிரத்தியேகமான விண்ணப்பப் பத்திரங்களில் செய்யப்படாத கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூ. 250 கொடுத்துப் பெறும் பற்றுச் சீட்டைக் காண்பித்தால் அன்றி கோரிக்கைகளுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.

3. இக்கோரிக்கை சம்பந்தப்பட்ட முழு விபரங்களும் அடங்கிய ஓர் பத்திரத்தை உணவு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. சுப்பிரமணியம்,
உணவு அதிகாரிக்காக.

கொழும்பு,
1960 ம் ஞு ஆகஸ்டு மீ 5 ந வ.

### வதுளை மாவட்ட அரசாங்க அதிபருக்கு முள்ளுக்கம்பி வழங்க கேள்விப்பத்திர அறிவித்தல்

கமத்தொழில், காணி அமைச்சு காரியாலயம், தபால் பெட்டி 500, கொழும்பு 1, கேள்விப் பத்திரச் சபை தலைவரால் 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 23 ந் திகதி முற் பகல் 10 மணிவரை பதுளுஓய நில குடியேற்றத் திட்டத்திற்கு தேவையான முள்ளுக்கம்பி (3,075 அந்தர்–12½ S.W.G.) வழங்க கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளிலும், வதுளை மாவட்ட அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக்கொண்ட மாதிரிப்பத்திரத்தில் அமைத் திருத்தல் வேண்டும். திறைச்சேரியில் அல்லது அக்கச்சேரியிலாவது இவ்வேலைக்கான ரூ. 50 ரொக்கப் பணம் கட்டினதாக அத்தாட்சிச்சீட்டு சமர்ப்பித்துக் கேள்விப்பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 19 ந் திகதி பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட ஐக்கிய சங்க சபைகளும், கிராம முன்னேற்ற சபைகளும் ரொக்கக் கட்டுப்பணம் செலுத்தவேண்டியதில்லை.

கேள்விப் பத்திரங்கள் மெழுகு முத்திரை இடப்பட்ட கூட்டில் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம், தலைவர் கேள்விப்பத்திரச் சபை, கமத் தொழில், காணி அமைச்சு காரியாலயம், தபால் பெட்டி 500, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும். "பதுளுஓய நிலகுடியேற்றத் திட்டத்திற்கு முள்ளுக்கம்பி" என்ற சொற்கள் உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட வேண்டும்.

1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 23 ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1, அரசாங்கக் காரியாலயம், காம்பரா 362 ல் திறக்கப்படும். விருப்பமுள்ள கேள்விப்பத்திரகாரர் சமுகம் அளிக்கலாம். பத்திரங்கள் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும் தொகையும் வாசிக்கப்படும்.

கேள்விகளையோ, அதன் பாகத்தையோ நிராகரிப்பதற்கு கேள்விப் பத்திர சபைத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

கேள்விப்பத்திரம் பத்திரத்தில் கொடுக்கப்பட்ட விலாசத்துக்கு வதுளை மாவட்ட அரசாங்க அதிபர் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் வேலையை செய்து முடிப்பதற்கான சத்தியக்கடுதாசிகள் கையெழுத்து வைக்கத் தவறினால் ரொக்கக் கட்டுப்பணம் அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். மேலும் குற்றவாளிகளாக பதியப்பட்டவர்களின் பத்திரத்தில் பெயரும் பதியப்படும்.

மற்றும் விபரங்கட்கு வதுளை மாவட்ட அரசாங்க அதிபருக்கு விண்ணப் பிக்கவும்.

பி. பி. வி. ஏ. ஜே. பி. சேனாரட்ன,
அரசாங்க அதிபர், வதுளை மாவட்டம்.

வதுளைக் கச்சேரி,
1960 ம் ஆடு ஜூலை மீ 28 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது